**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாள் வியாழக்கிழமை

**E.A.No.09/2025**
**in**
**E.A.No.08/2013**
**in**
**E.P.No20/2012**
**in**
**O.S.No.06/2011**

சின்னத்துரை ....மனுதாரர்/தகதாமனுதாரர்/ஆட்சேபணைதாரர்

/எதிர்/

1. ரத்தினம் ....எதிர்மனுதார்/1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

2. அழகையா

3. லட்சுமியம்மாள் ....எதிர்மனுதார்கள்/2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

(ஷை 2, 3 எதிர்மனுதாரர்கள் அவர்களின் பவர் ஏஜெண்டான சுரேஷ் என்பவர் மூலம்
(ஷை சுரேஷ் என்பவர் 2, 3 எதிர்மனுதாரர்களின் பவர் ஏஜெண்ட் என்பதை தகதாமனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை)

இம்மனுவானது 13.11.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் E.A.No.08/2013 மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.11.20 17:56:01 +0530

இம்மனுவிற்கு Allowed on Cost என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17 பிரிவு 151–ன் கீழ், E.A.No.08/2013 மனுவில் ம.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் ம.சா.1–ஐ அழைக்கக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

இம்மனு தபசில் சொத்தை 1ம் மனுதாரர் இந்நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்ள உரிமையில்லை என பரிகாரம் கோரி நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி நிறைவேறுதல் மனுவில் E.A.No.08/2013 ல் மனுதாரர் தரப்பு சாட்சி.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக 28.10.2025 ல் வாய்தா ஏற்பட்டிருந்தது என்றும், அன்றைய தினம் மனுதாரர் ஊர் கோவில் திருவிழா என்பதால் வர இயலவில்லை என்றும், மனுதாரர் 28.10.2025 ல் ஆஜராகாததினால் மனுதாரர் தரப்பில் ம.சா.1ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு தொடர் சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும், ம.சா.1 ஆன மனுதாரரை எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தால் மட்டுமே நீதியின் சமநிலை பரிபாலனம் ஏற்படும் என்றும், ஆகையால் E.A.No.08/2013 மனுவில் ம.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக மீண்டும் ம.சா.1–ஐ அழைக்கக் கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் Allowed on cost என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 2, 3 எதிர்மனுதாரர்கள் E.A.No.08/2013 மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.11.20 17:56:10 +0530

தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) E.A.No.08/2013 மனுவானது மனுதாரர் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) வழக்குகோப்பின் பரிசீலனையில் இருந்து, ம.சா.1 குறுக்கு விசாரணைக்காக E.A.No.08/2013 மனுவானது பல வாய்தாக்களாக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் ம.சா.1 28.10.2025 அன்று குறுக்கு விசாரணைக்காக இந்நீதிமன்றத்தால் ஆஜராகாத காரணத்தினால் ம.சா.1 குறுக்கு விசாரணை இந்நீதிமன்றத்தில் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

7) மனுதாரரால் இம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்களை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சிய, சான்றாவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகையால், மனுதாரரால் மனுவில் தெரிவித்துள்ள காரணங்கள் இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

8) இருப்பினும், E.A.No.08/2013 மனுவின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு ம.சா.1–ஐ திரும்ப அழைத்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சரியானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.20 17:56:17 +0530

9) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

<u>10) இறுதியாக</u>

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1வது எதிர்மனுதாரருக்கு நேரடியாக 24.11.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 24.11.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.20 17:56:24 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-

- இல்லை -

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.11.20 17:56:31 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

E.A.No.09/2025
in
E.A.No.08/2013
in
E.P.No20/2012
in
O.S.No.06/2011

உத்தரவு (Draft / Fair)
நாள் : 20.11.2025